**இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்திச் செயற்திட்டம் (II டிபி) - 2015**

இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (ஐஐடிபி) 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் (ஐஎவ்ஏடி) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 ஜனவரி 30 ஆந் திகதிய 1-857-எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் 9.03 ஆம் பிரிவு, IX ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய மாகாண சபைகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வட மாகாணத்தின் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களமும் விவசாயத் திணைக்களமும் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. நீர்ப்பாசன உட்கட்டமைப்பின் ஆக்கபூர்வமானதும் நிலைத்திருக்கக்கூடியதுமான முகாமைத்துவத்தை ஊக்குவித்தல் மற்றும் நீர் மற்றும் காணிகளது உற்பத்தித்திறனின் நிலைத்திருக்கக்கூடிய முன்னேற்றத்தை அடைதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 3,782.20 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 29.32 மில்லியன் ஆனதுடன், அதில் ரூபா 2,819.77 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 22.23 மில்லியன் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக, ரூபா 160 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.23 மில்லியன் தனியார் துறை மூலமும் ரூபா 351 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.70 மில்லியன் செயற்திட்டத்தின் பயனாளிகளினாலும் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதனது நடவடிக்கைகளை 2012 சனவரி 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கான வழிகாட்டல்கள் போன்றவற்றுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். செயற்திட்டக் கணக்காய்விற்காக இலங்கை கணக்காய்வு நியமங்கள் மற்றும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கான வழிகாட்டல்கள் போன்றவற்றிற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக்

கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதிய வழிகாட்டல்கள் என்பவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தின் வழிகாட்டல்கள் என்பவற்றிற்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சிவில் வேலைகளிற்கான கொடுப்பனவுகளிலிருந்து கழிக்கப்பட்ட ரூபா 21.52 மில்லியன் தொகையான நிறுத்திவைத்தல் பணம் கணக்குகளிற்கு முன்கொண்டுவரப்பட்டிருக்காமையால் சிவில் வேலைகளின் பெறுமதி மற்றும்

செலுத்தவேண்டிய நிறுத்திவைத்தல் பணம் என்பன ரூபா 21.52 மில்லியன் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 254,300 பெறுமதியான கணணிகளும் உபபாகங்களும் சிவில் வேலைகளின் கிரயத்தின் கீழ் தவறுதலாக காட்டப்பட்டிருந்தது. மேலும், ரூபா 1.86 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடம், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணம் என்பனவும் அறிவுரை சேவைகளின் கிரயத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்படாது இருந்த ரூபா 490 மில்லியன் பெறுமதியான சிவில் வேலைகள் அத் திகதியிலுள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் பூர்த்திசெய்யப்பட்ட சிவில் வேலைகளாக காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐஎவ்ஏடி | 22.23 | 2,819.77 | 846.60 | 3.35 | 459.04 | 9.02 | 1,197.97 |
| தனியார் துறை பங்களிப்பு | 1.23 | 160.00 | - | - | - | 0.01 | 0.58 |
| பயனாளிகள் பங்களிப்பு | 2.70 | 351.00 | - | 0.12 | 16.02 | 0.13 | 17.06 |
| இலங்கை அரசாங்கம் | 3.16 | 451.43 | 153.40 | 0.31 | 40.69 | 1.01 | 131.24 |
| மொத்தம் | **29.32** | **3,782.20** | **1,000.00** | **3.78** | **515.75** | **10.17** | **1,346.85** |

மேற்கூறப்பட்ட தகவல்களின் பிரகாரம், ரூபா 2,819.77 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 22.23 மில்லியன் ஒதுக்கீட்டின் 40 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,197.97 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 9.02 மில்லியன் மாத்திரம் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்ததிலிருந்து 04 வருடங்கள் கடந்த பின்னர் கடன் பெறுகைகளிலிருந்து பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் கூறு – 01 இன் கீழ் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நோக்கங்களிற்காக ஒதுக்கீட்டின் 45 சதவீதமும் செயற்திட்டத்தின் கூறு – 02 இன் கீழ் உற்பத்தி விரிவாக்கல் மற்றும் சந்தைப்படுத்தல் நோக்கங்களிற்காக ஒதுக்கீட்டின் 11 சதவீதமும் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்திடமிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 18 பொதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சிவில் நிர்மாண வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்த அதேநேரம் 39 பொதிகளின் கீழுள்ள ஏனைய சிவில் நிர்மாண வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 17 சதவீதத்திலிருந்து 67 சதவீதம் வரையிலான வீச்சில் செய்முறையிலிருந்தது. மேலும், உற்பத்தி, விரிவாக்கல் மற்றும் சந்தைப்படுத்தல் முதலியவற்றின் கீழான ஏனைய நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 61 சதவீதத்திலிருந்ததென செயற்திட்டத்தால் விளக்கமளிக்கப்பட்டது. பின்வரும் மேலதிக அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், விநியோகக் கால்வாய்களின் 123 கிலோமீற்றர்களை புனரமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் அதில் 85.62 கிலோமீற்றர்கள் மாத்திரமே 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. மேலும், நீர்ப்பாசன முறைமைகளின் 1,650 கட்டமைப்புக்கள் திருத்தப்பட வேண்டுமென இனங்காணப்பட்டதுடன் அதில் 1,038 கட்டமைப்புக்கள் மாத்திரமே 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திருத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, 135 நீர் உயரக் கோல்கள் நிறுவப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் கால்வாய்களில் நீர் உயரக் கோல்கள் எதுவும் நிறுவப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டமானது பண்ணை வீதிகளின் 150 கிலோமீற்றர்களை புனரமைப்பதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தகைய புனரமைப்பு வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கால்வாய் அணைகளை பலப்படுத்துவதற்கு 40,000 காட்டு மரங்களை நடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10,500 மரங்கள் மாத்திரமே நடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, 250 விவசாயக் கிணறுகள், 21 உலர்த்தும் தளங்கள் மற்றும் 03 நெற்களஞ்சியங்கள் என்பன செயற்திட்டத்தால் நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி நடவடிக்கைகள் 2015 மே மாதத்தில் அரசசார்பற்ற அமைப்பொன்றின் தாமதத் தெரிவு காரணமாக மந்தமான செயன்முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது. ஆகையால், சமூக அணிதிரட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டதை அமுல்படுத்துவதற்கு மதிப்பிடப்பட்ட ரூபா 86.34 மில்லியன் தொகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 14.34 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. பயிற்சி நோக்கங்களிற்காக ரூபா 2.58 மில்லியன் தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 11.76 மில்லியன் மீதி தொகையானது சமூக அணிதிரட்டல் மற்றும் பயிற்சி நோக்கங்களிற்காக வாடகைக்கமர்த்தப்பட்ட அரச சார்பற்ற அமைப்பொன்றின் நிர்வாக நோக்கங்களிற்காக செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மேலும், உற்பத்தி விரிவாக்கல் மற்றும் சந்தைப்படுத்தலின் உப கூறின் கீழ் ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த 03 விரிவாக்கல் அலுவலகங்களில் எந்தவித விரிவாக்கல் அலுவலகங்கள் எதுவும் ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் போது அவற்றிற்கான விரிவாக்கல் அலுவலர்களுக்கான பயிற்சிகள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், பிரதேசத்திலுள்ள விவசாயிகள் வர்த்தக விவசாயம் மீது சிறந்த நடைமுறைகளை பிரயோகிப்பதற்கும் விவசாய – வணிகங்களின் நிலைத்திருக்கக்கூடிய தன்மையை உறுதிப்படுத்துவதற்கு வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் வசதிகளினை பயன்படுத்துவதற்கும் போதுமானளவு ஊக்குவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தால் பின்பற்றப்பட்ட கொள்வனவுச் செய்முறை நிதிக்கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. ஒப்பந்த வேலைகளின் 136 பொதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்வனவுகளுக்கான நேர அட்டவணை கொள்வனவுச் செய்முறையின் ஆரம்ப புள்ளியிலிருந்து அதன் பூர்த்தியாக்கல் வரை எடுக்கப்பட்ட ஒவ்வொரு தனியான கொள்வனவு நடவடிக்கையின் படிமுறைகளை உறுதிப்படுத்துவதற்கு இயன்றதாக கால வரிசையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கொள்வனவுக் குழுவின் கூட்டங்களிற்கான உறுப்பினர்களின் வரவுப்பதிவேடு அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் பிரிவின் பிரகாரம் கடந்த 04 வருடங்களிற்கு மேலாக பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிவில் வேலைகளிற்கான 2015 மே 13 இன் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், பரந்தன் பிரதான கால்வாயின் புனரமைப்பு வேலைகள் 2015 திசெம்பர் 16 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் உரிய வேலைகள் ஒப்பந்தகாரரின் தவறுகள் காரணமாக வேலைகளின் 55 சதவீதம் பூர்த்தியான பின்னர் 2015 நவம்பர் மாதத்திலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

(இ) 12 ஒப்பந்த பொதிகளின் கீழ் ரூபா 10.8 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் சிவில் வேலைகளின் ஒப்பந்தங்கள் நிதி இயலளவு மற்றும் அனுபவங்களை மதிப்பீடு செய்யாமல் விவசாயிகள் அமைப்புக்களிற்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, அவற்றுக்கான சிவில் வேலைகள் உப ஒப்பந்தகாரர்களினூடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.4 நிதிக் கட்டுப்பாடுகள் மீதான சர்ச்சைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தால் செயற்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை மேவுகை செய்வதற்கு நிறைவேற்றல் மற்றும் அமுல்படுத்தல் முகவர்களின் உள்ளக கணக்காய்வுப் பிரிவுகளினால் உள்ளக கணக்காய்வுத் திட்டம் மற்றும் அதற்கான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இதன் விளைவால், மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்ட உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பாக பொருண்மையான அவதானிப்புக்களை உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கொண்டிருக்கவில்லை.

(ஆ) பெறுமதி சேர் வரி நோக்கங்களிற்காக பதிவுசெய்யப்பட்டிராத 02 ஒப்பந்தகாரர்களிற்கு ரூபா 1.98 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டிருந்தது. மேலும், அவற்றின் மீதான பெறுமதி சேர் வரிப் பதிவின் செல்லுபடியாகும் தன்மை மற்றும் சிட்டைகள் பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவு நேரத்தில் செயற்திட்டத்தால் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.